[1982 செப்டம்பர் 8

சிறந்த விளையாட்டு வீரர்களை உற்சாகப்படுத்துவதற்கான திட்டங்கள்.

*வினா எண் 26—திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

சிறந்த விளையாட்டு வீரர்களை மேலும் உற்சாகப்படுத்த தமிழக அரசு ஏதேனும் புதிய திட்டங்களை வகுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தமிழ்நாட்டின் சிறந்த விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் பொருட்டு விளையாட்டு மற்றும் இளைஞர் பயிற்சித் துறை ஒவ்வொரு ஆண்டும் பாராட்டு விழா ஒன்றினை நடத்தி, அந்த ஆண்டில் பன்மாநில, தேசிய, பன்னாட்டு ஆகிய உலக விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு அரசு விருதுகள் வழங்கி கௌரவிக்கின்றது.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் டோக்கியோவில் நடைபெற்ற ஜூனியர் ஹாக்கி விளையாட்டுப் போட்டியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர் ஒருவர் கூட இல்லை. தமிழ்நாட்டில் பயிற்சிப் பெற்ற இரண்டு வீரர்கள் இருந்தும் கூட அவர்களை போட்டிக்கு அனுப்ப வில்லை என்று தெரிகிறது. இதுபோல் பல புகார்கள் இருக் கின்றன. பலர் ஒதுக்கப்படுகிறார்கள். இது அரசின் கவனத்திற்கு வந்ததா? இதற்கு தக்க பரிகாரம் செய்வதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நேரடையாக இந்தத் துறைக்கு தொடர்பு இல்லை என்றாலும் மாண்புமிக்க உறுப்பினர் அவர்கள் வெளியிட்ட உணர்வு எல்லோராலும் மதிக்கப்பட வேண்டிய ஒன்று கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. உலக ஹாக்கி பந்தயத்தில் நாம் வெற்றிப் பெறாததற்கு முக்கியமான காரணம், அப்பந்தயத்திற்கு வீரர்களைத் தேர்ந்தெடுப்பதில் தவறுகள் ஏற்படுகிறது என்பது பலராலும் சொல்லப்படும் ஒன்று. இதை உரிய பொறுப்பில் உள்ளவர்களிடம் எடுத்துச் சொலலி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழ்நாட்டில் கால் பந்து விளையாட்டில் ஆர்வம் காட்டப்பட்டு சிறந்து கால் பந்து வீரர்கள் பயிற்சி பெறு கிறார்கள். சென்னையில் நேரு ஸ்டேடியத்தில் அப்படிப்பட்ட கால் பந்து விளையாட்டு வீரர்கள் உருவாகுவதற்கு மாலை நேரத்தில் பயிற்சி பெறுவதற்கு வசதியாக அங்கே பிரகாசமான ஒளி வசதி செய்து தரவேண்டும் என்று கோரிக்கை இருக்கிறது. அந்த கோரிக்கையை அமைச்சர் அவர்கள் நிறைவேற்ற முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்?

1982 செப்டம்பர் 8]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கோரிக்கை விடப்பட்டது உண்மை. ஆனால் அதைப்பற்றிய விவரம் இப்போது என்னிடம் இல்லை. ஆகவே தனியாகக் கேள்வி போட்டால் விவரம் தரப் படும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கம் அளிக்கும் முயற்சியில் தொழில்நுட்பக் கல்லூரி, மருத்துவக் கல்லூரிகளில் குறிப்பிட்ட சதவீதம் ஒதுக்க அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஒரு சலுகை ஓரளவுக்கு நாம் செய்கிறோம். மேலும் விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கம் அளிப்பது என்பது வேறு, இன்ஜினியர்கள், டாக்டர்களை ஊக்கு விப்பது என்பது வேறு. விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கம் தர வேண்டும் என்பதற்காக எல்லாவிதமான ஆதரவும் தரப் படுகிறது.

பேயன்விளை இந்து ஆரம்பப்பள்ளி.

* வினா எண் 27–திரு. சி. கேசவ ஆதித்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்செந்தூர் தொகுதி ஆறுமுகநேரி பேயன்விளை இந்து ஆரம்பப்பள்ளி ஆரம்பிக்கப்பட்டு எத்தனை ஆண்டுகள் ஆகின்றன?

(ஆ) அந்தப் பள்ளியின் அங்கீகாரம் இடையில் ஏன் ரத்து செய்யப்பட்டது?

(இ) மீண்டும் அங்கீகாரம் எப்பொழுது கொடுக்கப் பட்டது?

(ஈ) இப்பொழுது அங்கு எத்தனை ஆசிரியர்கள் வேலை பார்க்கின்றனர்?

(உ) எத்தனை மாணவர்கள் படிக்கின்றனர்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) 90 ஆண்டுகள்.

(ஆ) இப்பள்ளியில் பணி புரிந்து வேலை நீக்கம் செய்யப் பட்ட தலைமையாசிரியரை மீண்டும் பணியில் சேர்த்துக்கொள்ளு மாறு, மேல் முறையீட்டு அதிகாரியால் பிறப்பிக்கப்பட்ட உத்திரவைப்பள்ளி நிர்வாகம் நிறைவேற்றாத காரணத்தால் விதி களின்படி இப்பள்ளியின் அங்கீகாரம் 11-1-78 முதல் ரத்து செய்யப்பட்டது.